1987 மார்ச் 4]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையைப் பற்றிப் பரிசீலிக்கலாம். இதைப் பொறுத்தவரையில் ராஜாஜி மருத்துவமனையில் இதற்குண்டான இடம் இருக்கிறதா என்பது தெரியவில்லை. எனவே அதைப் பரிசீலித்துத்தான் சொல்ல வேண்டும்.

மீனவர்களுக்கு அரசு மானியத்தில் விசைப் படகுகள்.

49—(*வினா எண் 6529) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்பிடிப்பு தொழிலுக்காக தமிழகத்தில் மீனவர்களுக்கு 1982–83, 1983–84, 1984–85 ஆண்டுகளில் எத்தனை விசைப் படகுகள் அரசு மானியத் தொகையில் வழங்கப்பட்டுள்ளன?

(ஆ) குமரி மாவட்டத்தில் எத்தனை பேருக்கு வழங்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) 1982-83, 1983-84, 1984-85ஆம் ஆண்டுகளில் கண்ணாடி நாரிழைப் படகுகள் உட்பட 64 விசைப் படகுகள் பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டன.

(ஆ) கன்னியாகுமரி உற்பத்தி மற்றும் விற்பனை மீனவர் கூட்டுறவு சங்கத்திற்கு இரண்டு படகுகள் 1982-83ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்று ஆண்டுகளில் 64 விசைப் படகுகள் வழங்கியதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்தெந்த அடிப்படையில் எந்தெந்தத் திட்டங்களின் கீழ் இந்த விசைப்படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 29 விசைப்படகுகளும், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியின் மூலம் மீனவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு 35 விசைப்படகுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மானியத்தில் வழங்கப்படக்கூடிய அந்த விசைப்படகுகள், கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை தொடர்ச்சியாக எண்ணிக்கையில் மிகவும் குறை

வாக இருக்கின்றன. அங்கே பெருவாரியான மீனவப் பெருங்குடி மக்கள் இருக்கின்ற காரணத்தால் விகிதாச்சார அடிப்படையில் அந்தப் பகுதிக்கு முன்னுரிமை அளித்து அதிகமான விசைப்படகுகளை அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அது அவரவர்கள் போடுகிற மனுவைப் பொறுத்து இருக்கிறது. வங்கிகள் கொடுக்கிற கடனைப் பொறுத்தும் இருக்கிறது. அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் கடன் உதவி தர முன்வராத காரணத்தால்தான் மானியத் தொகை ஒதுக்கியும்கூட அதைப் பயன்படுத்த முடியாமல் போய் விட்டது.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்றாண்டுகளில் அரசு வழங்கிய மானியத் தொகை எவ்வளவு? நடப்பு நிதியாண்டில் அரசு மானியம் கோரியும் அது சரியாக அனுமதிக்கப்படவில்லை என்ற தகவல் இருக்கிறது. அது உண்மையா? இதுவரையில் இந்த ஆண்டு எவ்வளவு மானியத்தொகை செலவாகி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1982–83, 1983–84, 1984–85 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான மானியத் தொகை எவ்வளவு என்பதற்கான புள்ளி விவரங்கள் இப்போது இல்லை. தனிக் கேள்வி கேட்டால் அதனைச் சேகரித்துத் தருகிறேன். இப்போது 80 சதவீதம் கடனாகவும், 20 சதவீதம் மானியமாகவும் 1981–82 முதல் 1984–85 முடிய அதாவது டிசம்பர் முடிய 190 கண்ணாடி இழைப் படகுகளுக்கு அரசு ஒப்பளித்தது. ஆனால் மானியத் தொகை ஒதுக்கியும்கூட பயன்படவில்லை. தேசியவுடைமையாக்கப்பட்ட வங்கிகளோ, கூட்டுறவு வங்கிகளோ கடனுதவி தர முன்வராத காரணத்தால்தான் பயன்படுத்த முடியாமல் போய்விட்டதே தவிர, வேறல்ல.

வேலூரில் அரசு மருத்துவமனை.

50—(*வினா எண் 7516) திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் அரசு மருத்துவமனை அமைந்துள்ள இடம் குறுகிய இடமாகவும் சுகாதாரமற்ற நிலையிலும் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இந்த மருத்துவமனையை நகருக்கு வெளியே விரிவான முறையில் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா